ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

2445/03 - 2025 ජූලි මස 14 වැනි සඳුදා - 2025.07.14

*2445/03 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்,***

***பிரிவு 53 இன் கீழ் கட்டளை***

2021ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 53 ஆல் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் பயனால் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு, அமைச்சரவையின் ஒப்புதலின் பேரில், இந்த கட்டளை மூலம் பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுகின்றேன் -

(அ) அமைச்சரவை, 2025.07.01 ஆம் திகதியிட்ட 25/1123/804/135 ஆம் இலக்க அதன் தீர்மானத்தின் மூலம், அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட நபரின் வணிகத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியாபாரமாக நியமிப்பதற்கு அங்கீகாரம் அளித்துள்ளது,

(ஆ) அத்தகைய வணிகத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதல்நிலை வியாபாரமாகக் கருத்தில் கொள்வதற்கான காரணம் இங்கே அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளது,

(இ) சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்படும் விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் இங்கே அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி இருக்க வேண்டும், மற்றும்

1A - PG 7203 — 312 (2025/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஈ) குறிப்பிடப்பட்ட சட்டங்களின் கீழ் வழங்கப்படும் விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள், இதற்கான அட்டவணை IV இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் தொடங்கி செயல்படுவதை நிறுத்தும்.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சர்.

கொழும்பு,
2025, யூலை 12.

**அட்டவணை I**

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரம்-தீர்வையற்ற தொழிற்பாடுகளாக நியமிக்கப்பட்ட வியாபாரத்தின் விபரங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | அங்கீகரிக்கப்பட்ட நபரின் பெயர் | **குளொதஸ்பின் மெனேஜ்மன்ட் என்ட் டெவெலொப்மன்ட் (பிரைவேட்) லிமிடெட்** |
| 2. | உரிம இலக்கம் | 2503040140 |
| 3. | உரிமம் வழங்கப்பட்ட திகதி | 2025, மார்ச் 28<br>வியாபாரம் ஆரம்பிக்கின்ற திகதி உரிமம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் இருக்க வேண்டும் (2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அங்கீகரிக்கப்பட்ட நபர்களின் பதிவு செய்தல், உரிமம் வழங்குதல், அங்கீகாரம் வழங்குதல் மற்றும் ஏனைய அங்கீகாகரங்கள் என்பவற்றிற்காக ஒழுங்குவிதிகளின் 27ஆம் ஒழுங்குவிதியைப் பார்க்கவும்) |
| 4. | கரைகடந்த கம்பனி பதிவிலக்கம் | PCC 00323993 |
| 5. | செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபார வகைப்படுத்தல் | செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியாபாரம் |
| 6. | விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களுக்கான தகவுடமை | **குளொதஸ்பின் மெனேஜ்மன்ட் என்ட் டெவெலொப்மன்ட் (பிரைவேட்) லிமிடெட்** என்பது செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியாபாரம் ஒன்றாக மாத்திரமே நியமிக்கப்பட்டுள்ளது - செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமாக எச்சந்தர்ப்பத்திலும் நியமிக்கப்படுவதற்கு தகுதி பெறமாட்டாது. |
| 7. | தகைமை தகுதிவிதி | 2023, ஒகத்து 04 ஆம் திகதியுடைய 2343/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கான வழிகாட்டுநெறிகள்) ஒழுங்குவிதிகளின் 2(அ) ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட தகுதிவிதிகள் |
| 8. | ஏற்புடைய விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் | 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கான வழிகாட்டுநெறிகள்) ஒழுங்குவிதிகளின் 3(1)(அ) ஒழுங்குவிதியில் குறிப்பிட்ட திட்டம் |

| | | |
|---|---|---|
| 9. | செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியாபாரம் செல்லுபடியான தன்மைக்கான நிபந்தனைகள் | இந்த வர்த்தமானி வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஆறு (06) மாதங்களுக்குள், மேலே உள்ள அங்கீகரிக்கப்பட்ட நபர் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவுடன் 2-01-11 இலக்கம் கொண்ட காணித்துண்டத்துக்கான காணி குத்தகை ஒப்பந்தத்தில் கையெழுத்திடத் தவறினால், செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியபார நிலை செல்லுபடியற்றதாக மாறும். |

**அட்டவணை II**

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரமாக கருத்தில் கொள்ளப்படுவதற்கான காரணம்**

கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் குறிக்கோள்கள், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் சட்டம் பிரிவு 53 (5) இல் கூறப்பட்டுள்ளவாறு தேசிய நலனை அல்லது தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, கொழும்புத் துறைமுக நகரத்தை இஸ்தாபிப்பதன் வெற்றியை உறுதி செய்வதற்காக வியாபாரங்களை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகமாக நியமிப்பதில் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட குளொதஸ்பின் மெனேஜ்மென்ட் என்ட் டெவலப்மென்ட் (பிரைவேட்) லிமிடெட், கொழும்புத் துறைமுக நகரத்தில் குளொதஸ்பின் டவர்ஸ் என்ற பெயரில் ஒரு உறுதியான கலை மற்றும் கட்டிடக்கலை சின்னத்தை உருவாக்கத் தயாராக உள்ளது, இது உலகின் மிகவும் மதிப்புமிக்க முதலீட்டாளர்கள், உலகளாவிய செல்வாக்கு செலுத்துபவர்கள் மற்றும் உயர் நிறுவனங்களை ஈர்க்கும். குளோத்ஸ்பின் டவர்ஸ், உயர் மதிப்புள்ள சந்தைப் பிரிவுகளான குடியிருப்பு, விருந்தோம்பல் மற்றும் வணிகப் பிரிவுகளைப் பூர்த்தி செய்யும் வகையில் செயலநுணுக்க ரீதியாக வடிவமைக்கப்பட்டுள்ளது, இது இலங்கையின் வளர்ந்து வரும் அசையாத ஆதன விருத்தி மற்றும் சுற்றுலாத் துறையில் ஒரு முக்கிய முதலீடாக தன்னை நிலைநிறுத்துகிறது.

குளொதஸ்பின் மெனேஜ்மென்ட் என்ட் டெவலொப்மென்ட் (பிரைவேட்) லிமிடெட், ஆடம்பர குடியிருப்புகள், ஏழு நட்சத்திர ஹோட்டல், உயர்நிலை சில்லறை விற்பனை இடங்கள் மற்றும் உயரடுக்கு அலுவலக சூழல்களை தடையின்றி ஒருங்கிணைக்கும் இரட்டை கோபுர அற்புதத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, அதே நேரத்தில் கொழும்புத் துறைமுக நகரத்தில் 24,324 ச.மீ. பரப்பளவில் ஹோட்டலில் உலகின் மிகப்பெரிய கலைக்கூடத்தையும் கொண்டுள்ளது.

குளொதஸ்பின் இரட்டை-கோபுர மேம்பாட்டில் அதி-ஆடம்பர குடியிருப்புகள், ஏழு நட்சத்திர ஹோட்டல், சிறந்த உணவகங்கள், விசேட சில்லறை விற்பனை இடங்கள், முடிவிலி குளங்கள், ஆரோக்கிய மையங்கள் மற்றும் உயர் தொழில்நுட்ப அலுவலக இடங்கள் உள்ளன. லீட் தங்கச் சான்றிதழுக்காக வடிவமைக்கப்பட்ட இந்தத் திட்டம், ஸ்மார்ட் கட்டிட அமைப்புகள், ஆற்றல் திறன் கொண்ட உட்கட்டமைப்பு, சூரிய சக்தி, மழைநீர் சேகரிப்பு மற்றும் தானியங்கி காலநிலை கட்டுப்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைக்கிறது.

கொழும்புத் துறைமுக நகரத்தில் காணி குத்தகைக்கு 75,000,000 அமெரிக்க டொலர்கள் மற்றும் நிர்மாணச் செலவுகள் மற்றும் செயல்பாட்டுக்கு முந்தைய செலவுகளுக்காக 465,104,317 அமெரிக்க டொலர்கள் ஒதுக்கீட்டில் 540,104,317 அமெரிக்க டொலர்கள் மொத்த முதலீட்டை முதலீடு செய்ய குளொத்ஸ்பின் மெனேஜ்மென்ட் என்ட் டெவலப்மென்ட் (பிரைவேட்) லிமிடெட் திட்டமிட்டுள்ளது. மேலும், முதல் ஆண்டில் 280 ஊழியர்களை பணியமர்த்த திட்டமிட்டுள்ளது.

கொழும்பை கலை கண்டுபிடிப்புகளுக்கான மையமாக மாற்றும் உலகின் மிகப்பெரிய கலைப் படைப்பாக இந்த முழு கட்டமைப்பும் கின்னஸ் உலக சாதனையில் இடம்பெறத் தயாராக உள்ளது. பிக் பென்னுடன் போட்டியிடும் வகையில் வடிவமைக்கப்பட்ட 15 மீற்றர் பாரிய கடிகாரம், கின்னஸ் உலக சாதனையை படைத்து, ஒவ்வொரு தளமும் ஒரு அதிவேக கலை இடமாக செயல்படும், புகழ்பெற்ற உலகளாவிய கலைஞர்களின் படைப்புகளைக் காண்பிக்கும் மற்றும் மதிப்புமிக்க கண்காட்சிகளை நடத்தும் உலகின் மிகப்பெரிய செங்குத்து கலைக்கூடமாக இருக்கும்.

உலகின் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பார்வையிடப்பட்ட அடையாளங்களில் ஒன்றாகவும், கட்டிடக்கலை சிறப்பம்சம், கலாச்சார புதுமை மற்றும் பொருளாதார சக்தியின் அடையாளமாகவும் மாறத் தயாராக உள்ளது. வெறும் முதலீடாக மட்டுமல்லாமல், இது உலகளாவிய அசையாத ஆதன, பொழுதுபோக்கு மற்றும் ஆடம்பரத்தில் ஒரு வரையறுக்கப்பட்ட தருணமாகும்.

**அட்டவணை III**

**சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்படுகின்ற விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள்**

| *கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் அட்டவணை II இல் பட்டியலிடப்பட்டவாறான சட்டவாக்கங்கள்* | *வழங்கப்படுகின்ற விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள்* |
|---|---|
| 1. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | (அ) அனைத்து வருமானமும், இலாபங்கள் மற்றும் பகிர்ந்தளிக்கப்படுகின்ற பங்கிலாபங்கள் முதல் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு இந்த சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்படும்.<br><br>(ஆ) மேற்கொள்ளப்படுகின்ற அனைத்துக் கொடுப்பனவுகளும் முதல் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு இந்த சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுத்திவைத்தல் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.<br><br>(இ) மேற்கூறிய இருபத்தைந்து ஆண்டு காலம் முடிவடைந்த பிறகு, இந்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையில் உள்ள நிறுவன வரி விகிதத்தில் இருந்து 50% ஊக்குவிப்புகள் பத்து வருட காலத்திற்கு வழங்கப்படும். |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டம் | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வணிக-ரீதியான பொருட்கள் மற்றும் சேவைகளின் சகல இறக்குமதிகள் மற்றும் சகல உள்நாட்டு கொள்வனவுகளும், இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட வரிகளிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம் | இச்சட்டத்தின் சகல ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம் | இச்சட்டத்தின் சகல ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 5. 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க மதுவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வணிக-ரீதியான பொருட்கள் மற்றும் சேவைகளின் சகல இறக்குமதிகள் மற்றும் சகல உள்நாட்டு கொள்வனவுகளும், இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 6. சுங்க கட்டளைகள் சட்டம் (அத்தியாயம் 235) | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வணிக-ரீதியான பொருட்கள் மற்றும் சேவைகளின் சகல இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 7. 2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வணிக-ரீதியான பொருட்கள் மற்றும் சேவைகளின் சகல இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு வணிக-ரீதியான பொருட்கள் மற்றும் சேவைகளின் சகல இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் விபரிக்கப்பட்ட சகல வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகள் என்பவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். |
| 9. 1988ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க பந்தயம் மற்றும் விளையாட்டு அறவீட்டுச் சட்டம் | இச்சட்டத்திலிருந்து விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட மாட்டாது. |
| 10.1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க வேலையாட்களின் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | இச்சட்டத்தின் சகல ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |

| *கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் அட்டவணை II இல் பட்டியலிடப்பட்டவாறான சட்டவாக்கங்கள்* | *வழங்கப்படுகின்ற விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள்* |
|---|---|
| 11. கேளிக்கை வரி கட்டளைகள் சட்டம் (அத்தியாயம் 267) | இச்சட்டத்திலிருந்து விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட மாட்டாது. |
| 12. 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க அந்நியச் செலாவணிச் சட்டம் | 2022 யூன் 3ஆம் திகதியுடைய 2282/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வெளிநாட்டு நாணய மாற்றல் (கொழும்புத் துறைமுக நகரத்தில் முதலீடுகள்) ஒழுங்குவிதிகள் தவிர, இச்சட்டத்தின் சகல ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 13. 2010ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கெசினோ வியாபார (ஒழுங்குவிதி) சட்டம் | இச்சட்டத்திலிருந்து விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்கப்படமாட்டாது. |

## அட்டவணை IV

## வழங்கப்படுகின்ற விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களின் செல்லுபடியாகும் காலம்

| *கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் அட்டவணை II இல் பட்டியலிடப்பட்டவாறான சட்டவாக்கங்கள்* | *ஆரம்பிக்கின்ற திகதி* | *முடிவடைகின்ற திகதி* |
|---|---|---|
| 1. 2017 ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | 2025 யூலை14 | 2060 யூலை13 |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14ஆம் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டம் | 2025 யூலை14 | 2050 யூலை13 |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டம் | 2025 யூலை14 | 2050 யூலை13 |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிச் சட்டம் | 2025 யூலை14 | 2050 யூலை13 |
| 5. 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க மதுவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 2025 யூலை14 | 2050 யூலை13 |
| 6. சுங்க கட்டளைகள் சட்டம் (அத்தியாயம் 235) | 2025 யூலை14 | 2050 யூலை13 |
| 7. 2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | 2025 யூலை14 | 2050 யூலை13 |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | 2025 யூலை14 | 2050 யூலை13 |
| 9. 1988ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க பந்தயம் மற்றும் விளையாட்டு அறவீட்டுச் சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க வேலையாட்களின் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 2025 யூலை14 | 2050 யூலை13 |
| 11. கேளிக்கை வரி கட்டளைகள் சட்டம் (அத்தியாயம் 267) | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 12. 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க அந்நியச் செலாவணிச் சட்டம் | 2025 யூலை14 | 2050 யூலை13 |
| 13. 2010ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கெசினோ வியாபார (ஒழுங்குவிதி) சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |

EOG 07-0154

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.